**கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் - 2015**

---

கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 27,833,407 கிரயத்திலான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகளின் நியாயப் பெறுமதி கருத்திற் கொள்ளக்கூடியளவில் வேறுபாட்டிற்குட்பட்டிருந்தால் வருடாந்தம் மீள்மதிப்பீடு தேவைப்பட்ட போதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,117,041,000 கூட்டுத்தொகையாக காண்பிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகத்தின் காணி 2010 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 தொடர்புடைய தரப்பினருடன் உள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

பல்கலைக்கழகத்தின் தகவல் மற்றும் தொழில்நுட்ப பிரிவின் விரிவுரையாளரொருவர் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட Lanka Education And Research Network (LEARN) கம்பனியின் பணிப்பாளர் சபையின் உறுப்பினரொருவராக கடமை புரிந்து வருவதுடன் பல்கலைக்கழகத்தினால் அக்கம்பனியிடமிருந்து இணையத்தள வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் தொடர்புடைய தரப்பினர் பற்றி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹிவளையிலும் ராஜகிரியவிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 விடுதிகள் 2014 ஆம் ஆண்டிலிருந்தும் பல்கலைக்கழகத்தின் நிர்வாக கட்டிடம் மீளாய்வாண்டின்

சனவரியிலிருந்தும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய ரூபா 443,683,413 கூட்டுத்தொகையான கிரயம் மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இக்கட்டிடங்களுக்குரிய பெறுமானத்தேய்வினையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 63,269 ஐ கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆதனங்களுக்கு வாடகையாக பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கும் வருமானம் வெவ்வேறு நிதியங்களுக்கு செலவு வைத்தல் மற்றும் நிதியத்தின் மூலம் செலவிடப்படும் செலவினம் அந்நியத்திற்கு வரவு வைத்தல் மூலம் அவ்வருமானம் செலவினம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்காததாக அவதானிக்கப்பட்டது.

## 2.3 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2014 செப்தெம்பர் மாதத்தில் ஓய்வுபெற்ற முன்னாள் உப வேந்தரின் தனிப்பட்ட வீட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டில் ஆகஸ்ட், செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களுக்காக ரூபா 169,521 தொகை பல்கலைக்கழக நிதியத்திலிருந்து தனியார் பாதுகாப்பு சேவைகள் நிறுவனமொன்றுக்கு மீளாய்வாண்டின் போது ஆளுகை சபை அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 485,666 செலுத்த வேண்டியிருந்த மீதிகளில் ரூபா 259,400 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விடுதியிலிருந்த 125 மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 87,750 ஆன விடுதிக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது மேந்தலை செலவினம் மற்றும் எழுதுகருவிகளுக்காக தொலைக்கல்வி கேந்திரத்திடமிருந்து கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 422,961 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த 03 மாதங்கள் முதல் 06 மாதங்கள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 922,490 கூட்டுத் தொகையான நானாவித முற்பணம் 2016 மே 31 |

| | | |
|---|---|---|
| | | ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவும் | கல்விசார் ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 203,688,003 ஆன சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக நிதிக்குழு பரிந்துரை மற்றும் நிர்வாக சபை அங்கீகாரத்தின் பேரில் கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தில் பிரதான பதவிகளை வகிக்கும் மூன்று உத்தியோகத்தர்களுக்காக அலுவலகத்திலிருந்து வீடு வரை போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக ரூபா 30,000 வீதம் போக்குவரத்துப் படியொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், 2015 சனவரி 01 முதல் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை ரூபா 1,060,058 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | தொடர்புடைய சுற்றறிக்கைக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைக் கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு பதவிநிலை உத்தியோகத்தர்களின் ஆரம்ப சம்பளத்தில் 8 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை ரூபா 1,209,675 கூட்டுத்தொகை உபசரிப்புச் செலவினப் படிகளாக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2005 ஏப்ரல் 26 ஆந் திகதிய 861 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | (i) வெளிவாரி பரீட்சை தொடர்பான கூட்டிணைத்தல் நடவடிக்கைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது அது கூட்டிணைப்பு உத்தியோகத்தரின் ஆரம்ப சம்பளத்தில் 25 சதவீத அளவு அவரின் வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக செய்யப்படும் கடமைகளுக்காக மாதாந்தம் செலுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப் பட்டிருந்த போதிலும், அச்சுற்றறிக்கைக்கு முரணாக கூட்டிணைப்பாளரரொருவருக்கு நாளொன்றுக்கு ரூபா 4,000 வீதம் படிகளும் பிரயாணச் செலவினப் படியாக மேற்பார்வை செய்யும் ஒவ்வொரு நாளுக்கு ரூபா 1,500 வீதமும் தொலைபேசிப் படியாக மாதமொன்றிற்கு ரூபா 3,000 வீதமும் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மூன்று விரிவுரையாளர்களுக்கு மொத்தம் ரூபா 292,485 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன.<br><br>(ii) பரீட்சை முடிவடைந்து 03 மாதங்களுக்குள் விடைப்பத்திரங்கள் புள்ளிகள் இடப்பட்டு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை |

மேற்கொள்வதற்காக வெளிவாரி பரீட்சைப் பிரிவினால் பீடாதிபதியொருவருக்கு வருடாந்தம் ரூபா 7,500 உம் துறைத் தலைவரொருவருக்கு வருடாந்தம் ரூபா 5,000 வீதமும் படிகளாக செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அப்படிகள் ஆளுகை சபை அங்கீகாரத்தின் பேரில் மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 64,131,233 மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கெதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,414,730 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 70,545,963 ஆல் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 120,903,698 ஆல் அதிகரித்திருந்த போதிலும், மீண்டெழும் செலவினத்திற்காக அரசின் மானியம் ரூபா 193,650,556 ஆல் அதிகரித்தமை இந்நிதி விளைவுகளின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அது பற்றாக்குறையாக மாறியிருந்ததுடன், மீண்டும் 2015 ஆம் ஆண்டின் போது மிகையொன்றாக மாறியிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டின் போது பங்களிப்பு ரூபா 193,122,213 ஆல் அதிகரித்தமை தொடர்பில் மீண்டெழும் செலவினத்திற்கான அரசின் மானியம் ரூபா 193,650,556 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கல்விசார் செயலாற்றல்

மாணவர்களை அனுமதித்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கல்வித் துறையொன்றில் கற்பிப்பதற்காக அறிவுறுத்தல்களை வழங்குதல், வெவ்வேறு துறைகளில் நிபுணத்துவத்தை பெற்றுக்கொண்டுள்ளவர்களை உறுதிப்படுத்துவதற்காக பரீட்சைகளை நடாத்துதல், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை நடாத்துதல், இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வேறொரு பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் செயற்படுதல், பட்டப்படிப்பு, ஆய்வறிக்கைகள் மற்றும் ஏனைய கலைசார் திறமைகளை வழங்குதல் மற்றும் வெளிவாரி பரீட்சைகளை நடாத்துதல் என்பன பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கங்களாக இருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களில் மாணவர் பதிவு மற்றும் இறுதி பரீட்சை சித்தியடைதல் தொடர்பாக 03 கல்வியாண்டுகளுக்குரியவற்றை பரீசித்த போது பரீட்சைக்காக தோற்றிய மாணவர் எண்ணிக்கையில் பரீட்சையில் சித்தியடைதல் சதவீதம் 90 சதவீதத்தை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆராய்ச்சிப் படிகள்

(i) ஆராய்ச்சிப் படிகளுக்கான நிதியேற்பாடான ரூபா 21,885,000 தொகையில் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியிணியின் 110 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 21,469,953 தொகை படிகளாக வழங்கப்பட்டிருந்தன. இந்த ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றுக்கொண்ட விரிவுரையாளர்களுக்கிடையே 06 விரிவுரையாளர்களுக்குரிய செயன்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டின் ஆராய்ச்சி விவாதம் 2015 நவெம்பர் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 182,579 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றுக்கொண்ட 110 விரிவுரையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் காணப்பட்ட போதிலும், ஆராய்ச்சி விவாதத்திற்காக 26 ஆராய்ச்சிப் பத்திரங்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆராய்ச்சி செயன்முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் இறுதி பெறுபேறுகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக முறையான நடைமுறையொன்றை தயாரிப்பதற்காக ஆராய்சசி முகாமைத்துவ குழு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மனித மூலதன அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பட்டப்பின் படிப்பு மற்றும் முதுமானி பட்டங்களுக்காக ரூபா 10,000,000 தொகையும் மானிடக் கலை மற்றும் சமூக விஞ்ஞான உயர் கல்விக்கான தேசிய நிலையத்திடமிருந்து ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 2,250,000 தொகை பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அதற்காக முறையே ரூபா 1,770,468 மற்றும் ரூபா 500,000 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் பயன்பாட்டு சதவீதம் முறையே 18 மற்றும் 22 சதவீதமாக இருந்தன.

(இ) பல்கலைக்கழகங்களை சர்வதேச தரப்படுத்துவதற்குரிய நியமங்களின் படி, ஆராய்ச்சி நியமங்கள் முக்கியமானவையாக இருந்ததுடன், ஆராய்ச்சிக்கான ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு என்பவை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் 2016 மே மாதம் அளவில் சர்வதேச தரப்படுத்தலின் பிரகாரம் கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் 14,402 ஆவது இடத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பல்கலைக்கழகத்தின் காணியை சட்டரீதியாக கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தில் வெற்றிடமாக காணப்பட்ட சிரேஷ்ட உதவி நிதியாளர் பதவிக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தில் சபடிகல் விடுமுறை பெற்றுக்கொண்டிருந்த சிரேஷ்ட உதவி நிதியாளரொருவர் மீளாய்வாண்டின் போது தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார் அதன் பிரகாரம் 2015 யூன் 01 ஆந் திகதி முதல் 2015 ஒக்தோபர் 30 வரை 04 மாத காலப்பகுதிக்காக வாழ்க்கை செலவினப் படிகள், இடைக்காலப் படிகள், 15 சதவீத விசேட படிகள், 20 சதவீத படிகள் உட்பட ரூபா 71,792 ஆன மாதாந்த படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபடிகல் விடுமுறை காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சகல படிகளுடன் சம்பளம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததால் கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தினாலும்

விசாரணை செய்யாமல் அக்காலப்பகுதிக்காக அண்ணளவாக ரூபா 152,188 தொகையான இவ் அனைத்து படிகளும் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தருக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கூடுதலாக அனுப்பியிருந்த ரூபா 31,708 ஐ அவரின் ஊழியர் பணிக்கொடைத் தொகையிலிருந்து அறவிடுவதற்கு இணக்கத்தை தெரிவித்திருந்த போதும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பல்கலைக்கழகத்தினால் முன்னைய ஆண்டில் அச்சிடப்பட்டிருந்த ''சௌந்தர்ய வங்ச கதாவ'' என்ற பெயருடைய புத்தகத்தின் 420 பிரதிகள் மற்றும் அரங்கேற்ற கலைகள் புலனாய்வு புத்தகத்தின் 365 பிரதிகள் என்பன எஞ்சியிருந்தன. ''சௌந்தர்ய வங்ச கதாவ'' இன் விற்பனை விலை கூடுதலாக இருந்தமை மற்றும் கலை புலனாய்வு புத்தகங்களின் விற்பனை நடைமுறையொன்று தயாரிக்கப்படாமை மற்றும் விற்பனை எதிர்வுகூறலொன்று இல்லாமல் அச்சிட்டமை இவ்வாறு இருப்பு எஞ்சியமைக்கு காரணங்களாக இருந்தன.

**4.4 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயர் கல்வி அமைச்சின் 60 விடுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் தெஹிவளையில் நிர்மாணிக்கப்படுகின்ற விடுதியின் பக்கச் சுவர் நிர்மாணத்திற்காக உயர் கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் திட்டம் மற்றும் மதிப்பீடு என்பன ரூபா 8,761,695 இற்கு தயாரிக்கப்பட்டிருந்தன. கொள்வனவு வழிகாட்டலிலிருந்து விலகி பக்கச் சுவர் நிர்மாண நடவடிக்கைகளை ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு கையளிப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானித்திருந்தது.

(ஆ) 2015 பெப்ரவரி 10 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த தெஹிவளை கீர்த்தி ஹேரத் விடுதிக் கட்டிடத்தின் மேல் மாடியின் உட்கூரைப் பகுதி கழன்று இருந்தமை, சீமெந்து வெடித்திருந்தமை மற்றும் விடுதிக் கட்டிடத்தில் உள்ள சில குளியலறைகளில் நில மட்டம் முறையாக அமைக்கப்படாதமை காரணமாக அவ்விடங்களில் நீர் தேங்கியிருந்தமை மற்றும் மின்விசிறி போன்ற பொருத்துகைகள் செயற்படாதிருந்தமை போன்ற குறைபாடுகள் கணக்காய்வு திகதியான 2016 சனவரி 15 ஆந் திகதி அவதானிக்கப்பட்டதுடன் ஒப்பந்த நிறுவனத்தைக் கொண்டு திருத்திக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் கல்விசாரா நிறைவேற்றுனர் பதவியணியில் 08 வெற்றிடங்களும் 02 மிகைகளும் காணப்பட்டன. எழுதுனர் மற்றும் அதற்குச் சமமான தரங்களுக்காக 08 வெற்றிடங்களும் சிற்றூழியர்களுக்கான 18 வெற்றிடங்களும் இருந்தமையால் மொத்த கல்விசாரா பதவியணியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 34 ஆக இருந்தது. கல்விசார் பதவியணியில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் கல்வி உதவியாளர் பதவியணியில் 37 மிகைகள் காணப்பட்டன.

இவ்வெற்றிடங்கள் காரணமாக பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட தாக்கம் காரணமாக நிறைவேற்றுனர் பதவியணியின் வெற்றிடங்களுக்காக பதில்

கடமை அடிப்படையிலும் கல்விசார் பதவியணி வெற்றிடங்களுக்காக கல்வி உதவியாளர் பதவியணியின் மிகை பதவியணியினர் மூலமும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ஆ) 1997 நவெம்பர் 21 ஆந் திகதிய 721 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை மற்றும் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவன தாபன விதிக்கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 21.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் எவரேனும் விரிவுரையாளர் ஒருவர் உரிய தகுதிகாண் காலப்பகுதியில் பட்டப்பின் படிப்பிற்காக பட்டமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு தவறினால் ஆளுகை சபையினால் அவரின் சேவை முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மீண்டும் தற்காலிக விரிவுரையாளர் பதவிக்கு அவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது இரண்டு தற்காலிக விரிவுரையாளர்கள் தகைமை பூர்த்தி செய்த தினத்திலிருந்தே சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II) பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(இ) 1997 நவம்பர் 21 ஆந் திகதிய 721 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆவது தொகுதியின் (ஆ) இன் பிரகாரம் பயிலுனர் விரிவுரையாளர் பதவிக்காக உரிய பாடங்களுடனான ஆராய்ச்சியொன்றுடன் இரண்டு வருட பட்டப்பின் படிப்பு பட்டமொன்றும் விண்ணப்பிக்கும் திகதியில் காணப்பட வேண்டிய போதிலும், விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதியில் அத்தகைமைகளை பூர்த்தி செய்திராத ஒருவரின் நியமனம் 2011 நவம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற 83 ஆவது ஆளுகை சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

### 4.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னாள் உப வேந்தர் அலுவலகத்திற்குரிய கலந்துரையாடல் அறை மற்றும் அதன் அலுவலக உபகரணங்கள் 2014 பெப்ரவரி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயனுள்ள செயற்பாடொன்றிற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) புடவைகள் ஆடை கல்வித் துறைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 565,000 பெறுமதியான Universal Hydraulic இயந்திரம் 2013 ஒக்தோபர் 18 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்ததுடன் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த விடுதிகளுக்கு ஏற்பட்ட நட்டங்கள் சேதங்களுக்காக விடுதி உரிமையாளர்களுக்கு ரூபா 3,642,432 தொகை பல்கலைக்கழகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் ஊழியர் சேமலாப நிதிய சபைக்கு அரையாண்டு அறிக்கை தாமதமாக சமர்ப்பித்த காரணத்தினால் அந்நிதியத்தினால் பல்கலைக்கழகத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த இரண்டு வழக்குகளை இணக்கத்திற்கு கொண்டு வருவதற்காக தண்டப்பணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 169,847 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2014–2018 காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இத்திட்டத்தை தயாரிப்பதற்கு 2014 மே 15 ஆந் திகதி தனியார் மதியுரைக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் இச்செயற்பாடு 2014 யூலை 15 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் மாதத்திலேயே செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கு 1 ½ ஆண்டு அளவிலான காலம் கடந்திருந்ததுடன் பல்கலைக்கழகத்தினால் ரூபா 943,500 தொகை மதியுரைக் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட செலவினங்களை உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் உடன்படிக்கை மீறிய இரண்டு விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,617,048 தொகை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. முன்னைய கணக்காய்வு அறிக்கைகளிலும் இது தொடர்பாக சுட்டிக்காண்பிக்கப்பட்ட போதிலும் 03 ஆண்டுகள் முதல் 08 ஆண்டுகள் வரையான காலமாக இருந்து வரும் இவ்வாறு கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கோ 2016 மே மாதம் வரையிலும் பல்கலைக்கழகம் தவறியிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை |
| | காணிகள் தொடர்பாக சட்டரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யாமை |
| | பயன்படுத்தப்படாத சொத்துக்கள் காணப்படல் |

| | | |
|---|---|---|
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையிலிருந்து விலகி ஒப்பந்தங்களை வழங்குதல்.<br><br>நிர்மாணங்களில் காணப்படும் குறைபாடுகளை ஒப்பந்தக்காரரைக் கொண்டு உடனடியாக செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |